## <u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S.No. 979/2023 Date : 07.09.2026

பெயர் : குணசேகர் வாசா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

1) எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளீர் என்றால் முனிசிபாலிட்டி அலுவலகம் எனது சொத்தின் அளவு கல்லை பிடுங்கி விட்டார்கள் எனது சொத்து எனக்கு உரிமையானது என இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனது சொத்தை முனிசிபாலிட்டி எடுக்க கூடாது என வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை முனிசிபாலிட்டி அலுவலகத்திற்கு சாலை மற்றும் பூங்கா அமைப்பதற்காக தான ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . மேற்படி விபரம் தற்போது வரை தெரியாதா என்றால் இல்லை 2007 ஆம் ஆண்டு நான் அனுபவம் செய்து வந்த இடத்தை முனிசிபாலிட்டி அலுவலகத்தினர் எனது கல்லை பிடுங்கி விட்டதால் அப்போதுதான் தெரியும். அது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்தை யாரிடம் இருந்து வாங்கினீர்கள் என்றால் ஆதி கேசவன் வகையறாவிடமிருந்து அவர்களது பொது அதிகார முகவரான இளங்கோ வெங்கடேஷ் சீனிவாசன் ஆகியோர் மூலமாக கிரையம் வாங்கினேன்.

2) வ.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஜீவா, லலிதா, பிரகாஷ், பாபு, வேதாத்திரி, நந்தபூஷணம் ஆகியோர்களிடமிருந்து நான் கிரையம் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் ஆன பாஸ்கரன் ராஜசேகரன் சொக்கம்மாள் தசரத செட்டியார் கேசவன் புருஷோத்தமன் பூர்ணிமா பிரேமா சோமசுந்தரம் கவிதா ஆகியோர்கள் பற்றிய விபரங்கள் கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் நான் மேற்படி நபர்களிடமிருந்து கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். எந்த சொத்தை கிரயம் வாங்கினீர்கள் என்றால் புல எண்.139/8, 139/9, 139/9ஏ, 139/10ஏ, 139/10பி மனை எண். 59 என்ற சொத்தை கிரயம் வாங்கினேன். மேற்படி புல எண்ணில் அமைந்துள்ள சொத்துக்கள் அனைத்தும் ஒன்று முதல் 15 பிரதிவாதிகளுக்கு உரிமையான சொத்துக்கள் என்றாலும் அந்த சொத்தை நான் மேற்படி ஒன்று முதல் 15 பிரதிவாதிகள் நபர்களிடமிருந்து தான் நான் கிரையம் பெற்றிருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு நான் கிரையம் பெறாதால் நான் பெற்ற கிரையம் செல்ல தக்க தில்லை என்றால் சரியல்ல.

3) பொதுவாக ஒரு மனை பிரிவு அமைக்கப்பட்டால் அந்த மனைப்பிரிவில் பொது இடங்களாக பூங்கா கலைவளாகம் சாலை ஆகிய இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற விபரங்கள் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி மனையை கிரைய வாங்கும்போது மனை பிரிவில் குறிப்பிட்டுள்ள பூங்கா சாலை கடை வளாகம் ஆகிய பகுதிகள் பற்றி கிரையதாரர்களிடமிருந்து விபரத்தை கேட்டீர்களா என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct
**S/d. C.P. Mullai Vanan**
District Munsif–cum Judicial Magistrate,
Pallavaram